DMCUMJM COURT KUNNAM

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT DISTRICT MUNSIF - CUM - JUDICIAL MAGISTRATE, KUNNAM**

| **C.C.No. 163/2023 , Kunnam P.S. PW -6.** | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வராஜ் | Nationality | : | -இந்தியன் |
| Father/ Husband Name | : | கிருஷ்ணசாமி | Calling | : | உதவி ஆய்வாளர் |
| Village | : | அனுக்கூர் | Religion | : | - |
| Taluk | : | வேப்பந்தட்டை | Age | : | 54 /2026 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.03.2026 | | | | | |

1 முதல் 3 எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு முதல் விசாரணை**

1) நான் தற்போது மருவத்தூர் காவல் நிலையத்தில் இருந்து அயல்பணியாக பெரம்பலூர் ஊரக காவல்ந நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நான் கடந்த 23.03.2023 ம் தேதி குன்னம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது அரியருலூர் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்று, குன்னம் காவல் நிலையத்தில் தனலெட்சுமி, க/பெ. பாக்கியராஜ், புதுவேட்டக்குடி என்பவர் கொடுத்த புகாரை பெற்று குன்னம் மனு ரசீது எண். 218/2023 என பதிவு செய்து விசாரணை செய்து, விசாரணைக்கு பின் 26.03.2023 ம் தேதி காலை 12 மணிக்கு குன்னம் காவல் நிலைய குற்ற எண். 121/2023, இதச பிரிவுகள் 294(பி), 323,324, ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். (**உதவி ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அன்றைய தினமே 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சரவணன், அன்பரசு, என்பவர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம், பார்வை மகசர் முறையே அ.த.சா.ஆ 6 மற்றும் அ.த.சா.ஆ 7 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

2) பின்னர் 1 முதல் 3 எதிரிகளை 27.03.2023 ம் தேதி மாலை 16.30 மணிக்கு மேலமாத்தூர் மருதையான் கோவில் அருகே காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க பிணையில் விடுவித்தேன். மேலும், சாட்சிகளை விசாரணை செய்த வகையில் இவ்வழக்கின் ஏற்கனவே இருந்த சட்டப்பிரிவுகளான 294(பி), 323, 324, இதச என்பதை 294(பி), 323, 326

என மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்தேன். (**சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ. 8 ஆக குறியீடு** செய்யப்படுகிறது). பின்னர் இவ்வழக்கில் காயம் பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன்.

3) பின்னர் இவ்வழக்கில் தனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேற்கண்ட அதே பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் நடந்தது எந்த தேதி என்றால் 21.03.2023 ம் தேதி நடந்தது. மருத்துவர் விபத்து பதிவேடு கொடுத்தது 21.03.2023 ம் தேதி. முதல் தகவல் அறிக்கை 26.03.2023 ம் தேதி மதியம் 13.30 மணிக்கு பதிவு செய்தேன் என்றால் சரிதான். புகார் யார் கொடுத்தார் என்றால் தனலெட்சுமி கொடுத்தார். அவர் தானாக எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. பொய்யான புகார் வாக்குமூலத்தை வைத்து சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் காயம் பட்ட நபர் தனியாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்தது காயம்பட்ட நபரின் மனைவி என்றால் சரிதான்.

2. புகார்தாரரும் காயம் பட்ட நபரும் கருத்துவேறுபாடு காரணமாக தனியாக பிரிந்து வாழ்கிறார்கள் என்றாலும், காயம்பட்டந பரின் குடும்பத்தாரின் மீது இருந்த முன்பகை காரணமாக புகார் தாரர் புகார் அளித்துள்ளார் என்றாலும் சரியல்ல. புகார்தாரர் புகாரை அவர் கைப்பட எழுதவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் காவலர் எழுதி கொடுத்தார் என்றால், எழுதி கொடுத்தார்கள் யார் எழுதி கொடுத்தார்கள் என்று தெரியவில்லை.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMUNSIFCOURTKUNNAM